மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16ஆம் நாள் செவ்வாய்கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி. மகாலட்சுமி உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 209/2014 பி.வா.சா.2 என்பவரின் வாக்குமூலம்

| | |
|---|---|
| பெயர் .. வேல் | வயது ..67 |
| த/பெ .. ஆதிமூலம் | சாதி .. |
| கிராமம் ..ஆத்துரை | சமயம் .. |
| தாலுக்கா .. | தொழில் .. |

**பி.வா.சா. 2 குறுக்கு விசாரணை**

1. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.1ன் குறிப்பிட்டுள்ள 308/10 சர்வே நம்பரில் வாதி தாவா சொத்தில் கிழக்கு பக்கம் உள்ளதா என்றால் அது கிழக்கில் உ்ளளது மெயின்ரோடு ஆகும். தாவா சொத்திற்கு பின்னால் அரசு புறம்போக்கு இடம் உ்ளளது அதன் பிறகு தான் கால்வாய் உள்ளது என்றால் தாவா சொத்தனாது அதற்கு தான் பட்டா வழங்க உள்ளார். தாவா சொத்து நத்தம் புறம்போக்கு ஆக இருந்து பட்டா வழங்கப்பட்டது என்றால் தாவா சொத்து நத்தம் புறம்போக்கா அல்லது ஏரிகால்வாயாக இருந்தது எனக்கு தெரியாது.

2. மேலும், தாவா ஆ அட்டவணை சொத்து நத்தம் புறம்போக்கு சர்வே எண்.135/2கீழ் பட்டா வழங்கப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.1ல் மற்றும் 2 , ல் பொதுவழி காண்பிக்கப்பட்டுள்ளதா எ்னறால் தாவா சொத்து மற்றும் கிருஷ்ணண் வீட்டுக்கும் ( 2வதி அயிட்டத்திற்கு தெற்கு உள்ள வீடு) அதை தவிர்த்து தார் ரோடு போடப்பட்டுள்ளது. மேற்கூறிய தார் ரோடு முடியும் போது இரண்டு புளியமரம் உள்ளதாக நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் புளியமரங்கள் தார்ரோடுக்கு மத்தியில் இல்லை.

3. புளியமரத்திற்கு தெற்கில் மற்றும் கிழக்கு சென்று மெயின்ரோடு சென்று இணைகிறது என்றால் பலகாலமாக அதை தான் பயன்படுத்திவருகிறோம். மேற்கூறிய வழிதான் துண்டு தெரு

என்று கூறுகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துகளுக்கு அரசு வழங்கியதாக நான் தாக்கல் செய்துள்ள துய அடங்கல் பி.வா.சா.3 மற்றும் 4ல் ஆவணங்கள் தாவா சொத்திற்குண்டான ஆவணங்கள் கிடையாது என்றும் அது கால்வாய்க்கு மட்டும் தான் சம்மந்தமான ஆவணம் என்றால் எந்த சொத்திற்குண்டான ஆவணம் என்று எனக்கு தெரியாது. நான் தான் நான் 5 வருடங்களாக ஒன்றிய கவுன்சலராக இருந்தேன் என்றால் என் மனைவி தான் கவுன்சிலராக இருந்தார்.

4. நான் என்னுடைய முதன்மை விசாரணையில் ஒரே குடும்பத்தில் தனிதனியாக இரண்டு பட்டா வழங்கக்கூடாது என்ற விதி எதாவது உள்ளதா என்றால் இல்லை. பல வருடங்களாக தாவா பி அட்டவணை சொத்தின் வழியாக பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு ஆதாராமாக எதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. இரண்டவாது தாக பட்டா கொடுக்கப்பட்டதற்கு நடவடிக்கை எதாவது எடுத்தேனா என்றால் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேன்.

5. மேற்கூறிய மனுவின் விவரம் மற்றும் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இரண்டாவது பட்டா கொடுக்கபட்டது வாதியின் பெயருக்கு கொடுக்கபட்டதல்ல, வாதியின் கணவரான முனுசாமி அவர்களுக்கு தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேலும் தாவா பி அட்டவணை சொத்தில் சிமெண்ட் சாலை அமைக்க கோரி தீர்மானம் நிறைவேற்றி அதற்காக பிடிஓ அவர்களிடம் மனு கொடுத்து சாலை அமைக்க முயற்சி எடுத்தார்களா என்றால் மனு கொடுத்தோம் வழக்கு நிலுவையில் இருந்ததால் அவர்கள் சாலை அமைக்க முயற்சி எடுக்கவில்லை.

6. நான் எந்தமாதம், எந்த தேதியில் மனு கொடுத்தேன் என்பது ஞாபகம் இல்லை. அசல் வழக்கு 245/2014 ல் கொடுத்த மனுவின் நீதிமன்ற ஆணையர் அழைத்து சென்று தற்போது வரை அளவீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேலும் நான் கிராம மக்கள் பல வருடங்களாக சாலைகளை அனுபவித்து வருவதாக நான் கூறியுள்ளேன் அதற்குண்டான வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே 135/1ல் நான் புறம்போக்கு இடம் என்றும் அதை மட்டும் தான் நான் கோரிக்கை வைக்க முடியும் தாவா சொத்தில் எந்தவிதமான கோரிக்கையும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

7. தாவா ஆ அட்டவணை என்பது சிறிய அறை மற்றும் தாவா அ அட்டவணை என்பது சிறிய கடை என்றால் வீடும் கடையும் பக்கம் பக்கம் உள்ளது. மேலும் தாவா அ மற்றும் ஆ சொத்துக்கள் பக்கத்து பக்கத்து தான் உள்ளது என்றால் இரண்டும் பக்கம் பக்கம் ஒன்றாக தான் உள்ளது. வாதிக்கு ஆண் வாரிசு இல்லாததால் அவர்களுக்கு தொந்தரவு கொடுக்கும் நோக்கத்தில் செயல்படுகிறோம் என்றால் சரியல்ல.

**( குறுக்கு விசாரணைமுடிவடைந்தது )**

*Taken down by me in open Court read over to the witness and acknowledged by him/her to be correct.*

*Sdl/-B.Salma.*

*District Munsif,*

*Polur.*